15.4.2011

# *அன்னை வழியில் சாதிப்பது*

மார்ச் மாதம் online conference call மூலம் மக்கள் அன்றாட வாழ்க்கையில் value-க்களின் உதவியைக் கொண்டும் மற்றும் power of organization ஐக் கொண்டும் எப்படி சாதிக்கலாம் என்று விளக்கமாகப் பேசினேன். இப்பொழுது அன்னை பக்தர்களுக்கு அன்னையிடம் அவர்கள் வந்து விட்டார்கள் என்ற காரணத்தால் அன்னையின் அருள் அவர்கள் வாழ்க்கையில் செயல்படக்கூடிய வாய்ப்பு இருப்பதால் எத்தகைய சாதனைகளையெல்லாம் அவர்களால் நிகழ்த்திக் கொள்ள முடியும் என்பதைப் பற்றிப் பேச விரும்புகிறேன். அன்னையின் அருளின் சிறப்பைப் பற்றி அப்பா ஸ்ரீ கர்மயோகி அவர்கள் *1980* வாக்கில் முதன்முதலாக எழுத ஆரம்பித்தபொழுது மற்ற கடவுள்களிடம் தங்களுக்குள்ள தீராத பிரச்சினைகள் பற்றி பக்தர்கள் வைத்து பலிக்காத பிரார்த்தனைகளை அன்னையிடம் வைத்தால் அவற்றைப் பலிக்க வைக்கும் அளவிற்கு விசேஷ சக்தி வாய்ந்தது அன்னையின் அருள் என்று குறிப்பிட்டு இருந்தார். அன்னையின் அருளைப் பற்றி எழுதும்பொழுது டாக்டர்களால் குணப்படுத்த முடியாது என்று கைவிடப்பட்ட நோயாளிகள் அன்னையின் அருளை வேண்டி பிரார்த்தனை செய்தபொழுது அந்த தீராத நோய்கள் குணமடைந்ததாக எழுதினார். மேலும் தன்னால் திருப்பித் தர முடியாத அளவிற்கு கடன் சுமையை ஏற்றிக் கொண்டவர்கள் அன்னை பக்தர்களாக மாறியபொழுது அந்த கடன் சுமையிலிருந்து விடுபடும் அளவிற்கு புதிய அதிக வருமானத்தைப் பார்த்ததாகவும், முப்பத்தைந்து வயதாகியும் திருமணம் கூடி வராமல் ஏங்கிக் கொண்டிருந்த முதிர் கன்னிகளுக்கு அன்னையிடம் வந்த பிறகு அவருடைய அருளால் உடனே எதிர்பாராதவிதமாக திருமணங்கள் கூடி வந்ததாகவும், எந்த வேலையிலும் நீடித்து நிற்க முடியாதவர்களுக்கு அன்னையிடம் வந்த பிறகு இது வரையிலும் இல்லாத பொறுப்புணர்வு வந்து ஒரு நல்ல வேலையை தக்க வைத்துக் கொண்டிருப்பதாகவும், பல வருடங்களாக சொத்து தகராறு நிலவி வந்த கூட்டுக் குடும்பத்தைச் சேர்ந்த ஒருவர் அன்னை பக்தராக மாறி அன்னைக்கு சுமுக மலர்களை வைத்ததன் பலனாக நீண்ட காலச் சொத்து தகராறு முடிவுக்கு வந்து சுமுகம் பிறந்ததாகவும் என்றிப்படி பல உண்மை நிகழ்ச்சிகள் நடந்துள்ளன என்பதையும் அவருடைய புத்தகங்களில் குறிப்பிட்டு இருக்கிறார்.

நீண்ட காலப் பிரச்சினைகளுக்கு உடனடி நிவாரணத்தை அன்னையின் அருளால் கொடுக்க முடியும் என்பது அன்னையிடம் புதிதாக வந்த அன்பர்களுக்கு வியப்பாகவும் புரியாத புதிராகவும் இருக்கலாம். ஆனால் அன்னை மற்றும் பகவானுடைய ஆன்மீக சிறப்புகளை உணர்ந்த விவரமறிந்த அன்பர்களுக்கு அன்னையுடைய சக்தி சத்திய ஜீவிய சக்தி என்பதால் இத்தகைய அற்புதங்களை அதனால் அதிவேகத்தில் நிகழ்த்த முடிகிறது என்பது புரியும் என்பதால் அவர்களுக்கு ஆச்சரியம் இருக்காது. அப்பா அவர்கள் அன்னையின் அருளின் வேகத்தை மின்னல் வேகத்திற்கு ஒப்பிடுகிறார். அதாவது அன்னையிடம் வைத்த பிரார்த்தனைக்குண்டான பலன் ஒரு சில நிமிடங்களில் வந்து விடுகிறது என்கிறார். அன்பர்களுடைய வீடுகளிலும் அவர்கள் பணியாற்றும் அலுவலகங்களிலும் மின் சப்ளை தடைபடும்பொழுது அன்னையிடம் அதுபற்றி பிரார்த்தனை செய்த அடுத்த நிமிடமே மின் சப்ளை மீண்டும் வருவதை பல அன்பர்கள் பார்த்துள்ளார்கள். அம்மாதிரியே பணம், கை கடிகாரம், பேனா, மூக்குக்கண்ணாடி மற்றும் முக்கியமான ஆவணங்கள் (documents) ஆகியவை வைத்த இடம் தெரியாமல் ஒரு மணி நேரத்திற்கு மேலாக தேடிவிட்டு பின்பு அன்னை நினைவு வந்து அன்னையிடம் அது பற்றிச் சொன்னவுடன் அதுவரை கண்ணில் படாத பணம் மற்றும் பொருட்கள் உடனே கண்ணில் படுவது போன்ற நிகழ்ச்சிகளும் பல அன்பர்கள் வாழ்க்கையில் நடந்துள்ளன. இப்படி உடனடி பலன் கிடைக்கிறது என்பது பொதுவான ஒரு உண்மையாக இருந்தாலும் எங்களுக்கு இம்மாதிரி அன்னையிடம் சொன்னவுடனேயே கரண்ட் மீண்டும் வருவதில்லை, தொலைந்த பொருள் உடனே கிடைப்பதில்லை என்று சொல்கின்ற அன்பர்களும் இருக்கின்றார்கள். இப்படி சிலருக்கு உடனடியாக பலன் கிடைப்பதில்லை என்பது அருளுக்கு இத்தகைய மின்னல் வேக ஆற்றல் இல்லை என்ற அர்த்தத்தைத் தராது. மாறாக அருளால் மின்னல் வேகத்தில் பலனைத் தரமுடியும் என்ற நம்பிக்கை சம்பந்தப்பட்ட அன்பருக்கு இல்லை என்பதைத்தான் இது காட்டுகிறது. வேலை வேண்டும் என்ற பிரார்த்தனை மற்றும் வருமான உயர்வு, திருமண சம்பந்தம், வீடு கட்டுதல், வீடு வாங்குதல் மற்றும் புதிய தொழில் project துவங்குதல் ஆகியவை சம்பந்தமாக செய்யப்படும். பிரார்த்தனைகள் பலிப்பதற்கு நிறைய கால அவகாசம் தேவைப்படுவது போல் நமக்குத் தெரிகிறது. இங்கேயும் அப்பா அவர்கள் என்ன சொல்கிறார் என்றால், எப்படிப் பிரார்த்தனை தடைப்பட்டமின்சப்ளையை உடனடியாகக் கொண்டு வருகிறதோ, கண்ணில் படாமல் நம்மை அலைய வைக்கும் பணமும் பொருளும் அன்னையிடம் சொன்ன உடன் எப்படி கண்ணில் படுகிறதோ அதே மின்னல் வேகத்தில் தான் வேலை, வருமானம், திருமணம், வீடு கட்டுதல் போன்ற பெரிய விஷயங்களுக்கான பிரார்த்தனைகளுக்கும் அன்னை பதிலளிக்கிறார் என்கிறார். அதாவது பிரார்த்தனை செய்கின்ற அன்பரிடம்

அன்னை எதிர்பார்க்கும் அளவிற்கு சின்சிரிட்டியும் பிரச்சினையின் கடுமைக்கேற்ற தீவிரமும் அதாவது intensity யும் இருந்ததென்றால் அன்னை வழங்கும் response உம் மின்னல் வேகத்தில் தான் கிடைக்கிறது என்கிறார். நமக்குச் சூட்சும பார்வை இல்லாததால் சூட்சும நிலையில் இந்த மின்னல் வேக response கிடைப்பது தெரியவில்லை. நாம் பிஸிக்கல் லெவலில் காலம் மற்றும் இடம் (Time and space) ஆகியவற்றிற்கு கட்டுப்பட்டும் இவற்றை மீறி செயல்பட முடியாது என்று நம்பிக் கொண்டும் செயல்படுவதால் அருளின் மின்னல் வேகச் செயல்பாடு நம்முடைய தாழ்ந்த மற்றும் அறிவில்லாத மனநிலைக்கு ஏற்றவாறு தீவிரம் குறைந்து கால தாமதம் என்ற நியதிக்குட்பட்டு போதுமான கால இடைவெளிக்குப் பின்னர் தான் பலனாக நமக்குத் தெரிய வருகிறது. ஆனால் பெரிய விஷயங்களிலாவது இப்படிப்பட்ட தாமதமான response ஐ சந்தித்தே ஆக வேண்டும் என்ற அவசியமே இல்லை என்று அப்பா அவர்கள் சொல்கிறார். அவர் ஏன் அப்படி சொல்கிறார் என்றால் அதற்கான பதில் பகவானுடைய லைப் டிவைன் புத்தகத்தில் இருக்கின்ற பிரம்மன், புருஷா, ஈஸ்வரா என்ற படலத்தில் இருக்கிறது. இந்த படலத்தில் பகவான் அவர்கள் Time Eternity, Timeless Eternity மற்றும் இந்த இரண்டு நிலைகளும் ஒன்று சேர்ந்த மூன்றாம் நிலைக்காலமான Simultaneous Integrality என்ற மூன்று கால நிலைகளைப் பற்றி குறிப்பிடுகிறார்.

நாம் Time plane இல் செயல்படுகிறோம் என்பதால் நாம் எந்த வேலையைச் செய்தாலும் அதற்குண்டான பலன் தெரிவதற்கு நமக்கு கால அவகாசம் தேவைப்படுகிறது. ஒருவர் ஒரு கம்பெனியை நிறுவி ஒரு பிஸினஸ் செய்ய விரும்புகிறார் என்றால் அந்த கம்பெனியை நிறுவுவதற்குண்டான வேலைகளைச் செய்து என்ன பொருளை விற்க விரும்புகின்றாரோ அதை உற்பத்தி செய்தோ, வரவழைத்தோ வைத்துக் கொண்டு விற்பனையை செய்து வருமானத்தைப் பார்ப்பதற்குள் குறைந்தபட்சம் ஒரு மாத காலமாவது ஓடி விடுகிறது. ஒரு நாள் காலையில் பிஸினஸ் ஆரம்பிக்க விரும்பியவர் அந்த காலைப்பொழுதிலேயே இடத்தை ஏற்பாடு செய்து தேவைப்பட்ட பொருட்களையும் தயார் செய்து மதியமே விற்பனை செய்து மாலைப்பொழுதிலேயே நல்ல வருமானத்தைப் பார்த்து விட்டார் என்ற மின்னல் வேக நிகழ்ச்சிகளை பொதுவாக நாம்பார்ப்பதில்லை. வேண்டுமென்றால் வீட்டுத் தோட்டத்திலுள்ள தென்னை மரத்தில் விளைந்த தேங்காய்களை காலையில் பறித்து வீட்டுத் திண்ணையில் வைத்து உடனடியாக விற்பனை செய்து ஒரு வருமானத்தைப் பார்க்கலாம். அப்பொழுதும் தென்னை மரத்திலேறி தேங்காய்களைப் பறிப்பதற்கு அரைமணி நேரமாவது செலவாகும். ஆனால், பத்து, இருபது இலட்சம் முதலீடு செய்யக்கூடிய ஒரு வியாபாரத்தைப் பற்றி காலையில் சிந்தித்து உடனடியாக அமுல்படுத்தி அன்று மாலைக்குள்ளாகவே வருமானத்தைப் பார்த்து விட்டதாக நாம்பொதுவாக கேள்விப்படுவதில்லை.

அம்மாதிரியே ஒரு விவசாயி வயலில் நெல் விதைத்து பயிர் செய்யத் துவங்கினார் என்றால் நெல் முளைத்து வளர்ந்து நெல் மணிகள் தோன்றி அறுவடைக்குத் தயார் ஆனபிறகு தான் அறுவடை செய்து அதை விற்று ஒரு வருமானத்தைப் பார்க்க முடியும். இதற்கிடையில் மூன்று மாதங்களாவது ஓடி விடும். அம்மாதிரியே காலி இடத்தில் ஒருவர் வீடு கட்டத் துவங்கினால் கட்டுமானப் பணிகள் முடிந்து அவ்வீட்டுக்குள் முறையாக அவர் குடி போக வேண்டுமென்றாலும் அதற்கும் ஓரிரு மாதங்கள் கால அவகாசம் நிச்சயம் தேவைப்படும். ஆகவே Time plane இல் நாம் செயல்பட்டுக் கொண்டிருக்கும் வரையிலும் காலத்தாலும் இடத்தாலும் நாம் கட்டுப்பட்டுத்தான் இருக்க வேண்டும். அப்பட்சத்தில் செய்த வேலைக்கு உடனடியாக பலனைப் பார்ப்பதென்பது physical level லில் பெரும்பாலும் முடியாத காரியமாகி விடுகிறது. தவம் செய்யும் தபஸ்வி மற்றும் ரிஷிகளை எடுத்துக் கொண்டால் தியானத்தில் லயித்து தன்னை மறந்த நிலையில் இருக்கும்பொழுது அவர்களுக்கு நேரம் போவதே தெரியாமல் இருந்து விடுகிறது. பல நாள் தியானத்தில் இருந்து விட்டு கண் விழித்துப் பார்க்கும்பொழுது நாலைந்து நாளோ ஒரு வாரமோ ஓடி விட்டது அவர்களுக்குத் தெரிவதில்லை. அதாவது தன்னை மறந்த நிலையில் தியானத்தில் இருந்தபொழுது அவர்கள் அச்சமயத்தில் காலத்தைக் கடந்த நிலையில் இருந்திருப்பதாக அர்த்தம் செய்து கொள்ள முடியும். அதனால் தான் பல நாட்கள் கழிந்த பின்னரும் ஏதோ ஒரு சில மணி நேரம் தான் செலவாகி இருக்கும் என்று அவர்களுக்குத் தோன்றுகிறது. அன்னையை நினைத்து பன்னிரண்டு மணி நேரம் calling செய்யும் அன்பர்கள் இருக்கிறார்கள். இவர்களும் தியானத்தில் லயித்து தன்னை மறந்த நிலையில் இருக்கும் பொழுது பன்னிரண்டு மணி நேரம் போனது அவர்களுக்கு ஏதோ ஓரிரு மணி நேரங்கள் போனதாகத் தான் தோன்றுகிறது. ஆகவே இவர்களும் calling செய்து கொண்டிருந்த நேரத்தில் Time plane இல் இருந்து விடுபட்டு Timeless plane க்கு போய்விட்டார்கள் என்று தான் அர்த்தமாகும். நாமும் ஒரு காரியத்தை அனுபவித்து செய்து கொண்டிருக்கும்பொழுது நமக்கும் கூட நேரம் போவதே தெரிவதில்லை. அந்த நேரத்தில் நாமும் காலத்தைக் கடந்த நிலைக்குத் தான் செல்கிறோம். ஒரு நல்ல திரைப்படத்தை பார்த்துக் கொண்டிருக்கும்பொழுது நாம் அப்படத்துடன் ஒன்றிப் போய்விடுகின்றோம். மூன்று மணி நேரத்திற்கு பிறகு திரைப்படம் முடிவுக்கு வரும்பொழுது நமக்கு மூன்று மணி நேரம் போனதே தெரிவதில்லை. ஏதோ அரைமணிநேரம் தான் திரைப்படம் ஓடியது போலத் தோன்றுகிறது. பள்ளி விடுமுறை நாட்களை பொதுவாக சிறுவர்

சிறுமியர்கள் விளையாட்டிலேயே கழித்து விடுவார்கள். ஒரு மாத விடுமுறை முடிவுக்கு வரும்பொழுது ஏதோ ஒரு வாரம் தான் கழிந்து இருப்பது போல சிறுவர் சிறுமியர் உணர்வார்கள். ஆக அந்த விடுமுறை நாட்களில் அவர்கள் காலத்தைக் கடந்த நிலையில் இருந்ததாக நாம் புரிந்து கொள்ள வேண்டும்.

இப்போது நாம் அன்னைக்கு வருவோம். அன்னை அவர்கள் காலமும் காலத்தைக் கடந்த நிலையும் என்ற இந்த இரு நிலைகளும் ஒன்றாக கூடி இருக்கின்ற simultaneous integrality என்ற மூன்றாம் நிலை Time plane இல் இருக்கிறார்கள். நம்மைப் போல் மானுட உருவம் எடுத்து பூமியில் அவர்கள் அவர்களுடைய ஆயுட் காலத்தில் நடமாடினார் கள் என்றாலும் நம்மைப் போல காலத்திற்கும் இடத்திற்கும் அவர்கள் கட்டுப்பட்டு இயங்கவில்லை. அதாவது Time plane இல் அவர்கள் செயல்பட்ட காலத்திலும் காலத்திற்கு கட்டுப்படாமல் செயல்பட்டார்கள். அதே சமயத்தில் படைப்போடு தொடர்பே இல்லாமல் காலத்தை கடந்த நிலையில் இருக்கின்ற பரப்பிரம்மத்தைப் போல் பூவுலகத் தொடர்பில்லாமல் ஒதுங்கியும் இருக்கவில்லை.அவர் இஷ்டப்பட்டிருந்தால் மானிட அவதாரமே எடுக்காமல் தன்னுடைய காலம் கடந்த நிலை யிலேயே இருந்திருக்கலாம்.ஆனால் மானிட இனத்தின் மேலும் மற்றும் உலகில் உள்ள மற்ற ஜீவராசிகளின் மேலும் கொண்ட பரிவின்காரணமாக பூவுலக வாழ்க்கையை இறைமயமாக்க வேண்டும் என்ற நோக்கத்தின் காரணமாகவும் அவர் இருக்கின்ற உயர்ந்த நிலையிலிருந்து இறங்கி வந்து physical plane இல் மானுட வடிவமெடுத்து நம்மோடு நடமாடி னார். அப்படி மானிட வடிவம் தாங்கி வந்ததால் அவர் தன் தெய்வீக நிலையையோ அதற்குண்டான தெய்விக சக்தியையோ எதையும் இழக்கவில்லை. Physical plane இல் நடமாடிக்கொண்டு இருந்தபொழுது கூட தன்னுடைய சொந்த இருப்பிட மான சத்திய ஜீவிய நிலையோடு ஒரு தொடர்பை வைத்துக் கொண்டு தான் இருந்தார். ஆகவே அன்னையை பொறுத்த வரை யில் ஒரே சமயத்தில் காலம் மற்றும் காலத்தை கடந்த நிலை என்ற இரண்டு நிலைகளையும் உள்ளடக்கிய பகவான் குறிப்பி டுகின்ற simultaneous Integrality என்ற plane இல் தான் அவர்கள் செயல்படுகிறார்கள். இந்த Time plane இல் result என்பது உடனடியாக வருகிறது. ஏனென்றால் Timeless plane - உ ம் Time plane- உ ம் அருகருகே இருப்பதால் Timeless plane க்கு உண்டான உடனடி result ஐ கொண்டு வருகின்ற சக்தி அந்த ஆற்றல் இல்லாத Time plane ற்கும் தானாக வந்து விடுகின்றது.

ஒரு வாழ்க்கை சூழ்நிலையை உதாரணமாக எடுத்துச் சொன்னால் இது உங்களுக்கு நன்றாகப் புரியும் என்று நினைக்கிறேன். ஒரு M.L.A. அல்லது M.P. போன்ற செல்வாக்கு வாய்ந்த அரசியல்வாதியை எடுத்துக் கொள்வோம். அவருக்கு வீடு கட்டிக் கொள்வதற்கு Town Planning Authority-இல் ஒரு order வேண்டும் அல்லது மின்துறையிலிருந்து அவருடைய வீட்டிற்கு three phase power supply connection கொடுப்பதற்கான order வேண்டுமென்று வைத்துக் கொள்வோம். இவருக்கு அரசியல் பலமிருப்பதால் சம்பந்தப்பட்ட அதி காரிகளை phone இல் தொடர்பு கொண்டு தான் யாரென்று தெரியப்படுத்தி தனக்கு இப்படி ஒரு order வேண்டுமென்று கேட்டாலே போதும். மற்ற சாதாரண குடி மக்கள் நடையாய் நடந்து ஒரு மாதமாவது காத்திருந்து அதிகாரிகளுக்கு இலஞ்சம் கொடுத்து வாங்க வேண்டிய order-ஐ ஒரு phone call போட்டு அன்றைக்கே வீட்டிற்கு கொண்டு வந்து கொடுக்கும்படி செய்து கொள்கிறார். அதாவது ஒரு மாத வேலையை ஒரு நாளில் முடித்துக் கொள்கிறார். ஒரு மாதத்தை ஒரு நாளாக சுருக் குவதென்பது Time planeஐ Timeless plane ஆக ஆக்குவதற்கு சமம். இப்பொழுது M.L.A. வின் உறவினர் ஒருவ ருக்கு இப்படி ஒரு order Town Planning Authority- யிலிருந்தோ அல்லது மின்துறையிலிருந்தோ வேண்டுமென்று வைத்துக்கொள்வோம். அவர் M.L.A. வின் உறவினர் என்பதை தெரியப்படுத்திக் கொள்ளாமல் சம்பந்தப்பட்ட அலுவல கங்களுக்கு சென்றார் என்றால் அவரும் சாதாரண குடிமக்களைப் போல் நடையாய் நடந்து பணத்தை செலவழித்து தான் order ஐ வாங்க முடியும். ஆகவே அப்படி காத்திருக்க விரும்பாத உறவினர் M.L.A. இடமிருந்து recommendation letter வாங்கிக் கொண்டு அந்த office க்கு சென்று தான் யார் என்பதை தெரியப்படுத்தி letterஐ கொடுக்கிறார். M.L.A வின் உறவினர் இவர் என்று அவர்களுக்கு தெரியும் போது எப்படி M.L.A. விற்கு உடனடியாக வேலையை முடித்து கொடுத்தார்களோ அதே வேகத்தில் இவருக்கும் வேலையை முடித்து கொடுத்து விடுகிறார்கள். ஆகவே M.L.A. கூட இருப்பதால் M.L.A. அனுபவிக்கும் உடனடி ரிசல்ட் என்பதை இவரும் சேர்ந்து அனுபவிக்கின்றார். இந்த உதாரணத் தைச் சொல்லும்போது எப்படி இந்த Time plane உம் Timeless plane உம் கலந்து இருக்கின்ற மூன்றாம் நிலை கா லத்தில் உடனடி ரிசல்ட் கிடைக்கின்றது என்பது உங்களுக்கு புரியும் என்று நினைக்கிறேன். அன்னை இந்த மூன்றாம் நிலை காலத்தில் இருப்பதால் நாம் நம்பிரச்சினைகள் விஷயமாக பிரார்த்தனை செய்யும்பொழுது நமக்கும் நம் பிரச்சினைக ளுக்கும் இந்த உடனடி ரிசல்ட் கிடைக்கும் மூன்றாம் நிலை காலத்துடன் தொடர்பு கிடைத்து விடுகிறது. அதன் விளைவாக நம்முடைய பிரச்சினைகளுக்குண்டான தீர்வு உடனடியாக கிடைத்து நம் வாழ்க்கையில் ஏதோ miracle நடந்து விட்டது போல நமக்கு ஒரு அதிசயமும் ஆச்சர்யமும் வியப்பும் வருகிறது. பல வருடங்களாக வியாதியால் அவஸ்தைப்பட்டுக் கொண்டு இருந்தவர் அன்னையிடம் தன்னுடைய வியாதியை பற்றிப் பிரார்த்தனை செய்யும்பொழுது அது ஒரு சில நாட்க

ளில் குணமடைவது கண்டு அதிசயித்துப் போகிறார். இம்மாதிரியே நெடுங்காலமாக தீராத கடன், நெடுங்காலமாக கிடைக் காத **promotion,** நெடுங்காலமாக கூடி வராத திருமண சம்பந்தம் ஆகியவை நாம் அன்னையுடன் தொடர்பு கொள்ளும் போது உடனடியாக கூடி வருவது நம்மை வியப்பில் ஆழ்த்துகிறது. நாம்காலத்தால் கட்டுண்டிருந்தாலும் நம் பிரச்சினை களை அன்னைக்கு தெரிவிக்கும்போது அன்னைக்குண்டான உடனடி ரிசல்ட் என்ற அம்சம் அன்னையோடு உள்ள தொடர் பின் காரணமாக நம் வாழ்க்கைக்குள்ளும் வந்துவிடுகிறது.

அன்னையிடம் வந்தபிறகு ஓரிரு வருடங்களிலேயே மாதம் சில ஆயிரம் சம்பாதித்து கொண்டிருந்த அன்பர்கள் மா தம் சில இலட்சங்கள் வருமானமாக பார்க்கக்கூடிய அளவிற்கு வளர்ந்து விடுகிறார்கள். அன்னையின் ஜீவியம் காலத்தை சுருக்குகிறது என்பதால்தான் இப்படிப்பட்ட அன்பர்களால் ஓரிரு வருடங்களிலேயே இப்படி ஒரு வருமான உயர்வை பார்க்கமுடிகிறது. இப்படி ஒரு வருமான உயர்வை அனுபவித்த அன்பர்கள் மற்ற அன்பர்களிடம் பேசும்பொழுது "அன்னை யிடம் வந்திருக்காவிட்டால் இப்படி ஒரு வருமான உயர்வை இவ்வளவு குறுகிய காலத்தில் நான் பார்த்திருக்கவே முடியாது. பதினைந்து அல்லது இருபது வருடங்கள் கடினமாக நான் உழைத்த பிறகுதான் இப்படிப்பட்ட வருமான உயர்வு எனக்கு கிடைக்க வாய்ப்பு உள்ளது. ஒரு வேளை கிடைக்கலாம் அல்லது கிடைக்காமலும் போகலாம்" என்று சொல்வார்கள். மேலும் இம்மாதிரியே சுலபமாக சீக்கிரமாக கிடைக்காத சில **government order** கள் சம்பந்தப்பட்ட அன்பர்கள் அன் னையிடம் இதுபற்றிய பிரார்த்தனையை வைத்த பிறகு உடனே ஒரு சில நாட்களிலோ அல்லது ஒரு வாரத்திலோ கைக்குக் கிடைப்பதையும் பார்த்திருக்கிறார்கள். நான் இது வரையிலும் அன்னையினுடைய அருளாற்றல் எப்படி விசேஷமானது. அது கொண்டு வரும் பலன்கள் எப்படி நம்மை பிரமிக்க வைக்கிறது என்றெல்லாம் விளக்கிச் சொன்னேன். இப்பொழுது அன் னையோடு நாம் எப்படியெல்லாம் தொடர்பு கொள்ளலாம், அவருடைய அருளை எப்படி எல்லாம் பெற்று பயன்படுத்திக் கொள்ளலாம் என்று விவரமாகபேசவிரும்புகிறேன்.

*1.* முதலாவதாகவும் அன்பர்களால் மிகவும் சுலபமாகவும் கையாளக்கூடிய அணுகுமுறை என்னவென்றால் தம்முடைய பிரச்சினைகளைப் பற்றி அன்னைக்கு பிரார்த்தனை செய்து அவருடைய அருளால் தனக்கு தீர்வு வேண்டும் என்பதை அவரிடம் கேட்பது தான்.

ஆரம்ப நிலையில் இருக்கும் பெரும்பாலான அன்பர்கள் இப்படித்தான் அன்னையை அணுகுகிறார்கள். அதாவது ஒரு குறிப்பிட்ட பலனை வேண்டி ஒரு குறிப்பிட்ட பிரார்த்தனையை அன்னையிடம் வைக்கிறார்கள். இந்த பலன் கிடைக்கும் பொழுது அவர்கள் மகிழ்ச்சி அடைகிறார்கள். பிரார்த்தனை செய்யும் பொழுதே பல ஆரம்ப நிலை பக்தர்கள் அன்னைக்கு காணிக்கையும் கொடுத்து விடுகிறார்கள். ஒரு சிலர் பிரார்த்தனை பலித்து கைமேல் பலனை பார்த்த பிறகு அன்னைக்கு நன்றி அறிதலாக காணிக்கையை வழங்குவதும் உண்டு. இப்படிப்பட்ட பிரார்த்தனைகள் பலதரப்பட்டவை. வியாதி குணமாக வேண்டும். நல்ல வேலை மற்றும் வருமானம் கிடைக்க வேண்டும், நல்ல பள்ளி மற்றும் கல்லூரியில் **admission** கிடைக்க வேண்டும், கடன் பாரம் தீர வேண்டும், சொந்தமாக வீடு அமைய வேண்டும் மற்றும் திருமண சம்பந்தம் கூடி வரவேண்டும் என்று இப்படி நாம் அடுக்கிக் கொண்டே போகலாம். காணிக்கை கொடுப்பது மற்றும் பிரார்த்தனையை தினசரி அன்னையிடம் சொல்வது என்று இவை போக ஆரம்ப நிலை அன்பர்கள் கூடுதலாக அன்னைக்குகந்த மலர்களான **Prosperity** (நாகலிங்கப்பூ*),* **Luck** (அதிர்ஷ்டம்) மற்றும் **Grace flower** , சுமுக மலர்கள், பாதுகாப்பு மலர்கள் என்று இந்த மாதிரியான மலர்களை சேகரித்து அன்னைக்கு அர்ப்பணித்து இவ்வகையில் அருளின் செயல்பாட்டை விரைவுபடுத் துவதும் உண்டு. இது போக அன்னைக்கு சுத்தம் பிடிக்கும் என்று தெரிந்து கொண்டு அன்பர்கள் தம்முடைய வீட்டின் சுத்தத்தை விசேஷ முயற்சி எடுத்து உயர்த்தி அவ்வகையில் அருளைப் பெற்றுக்கொள்வதற்கு மேலும் உகந்த பாத்திரமாக தன்னை மாற்றிக் கொள்வதும் உண்டு. மேற்சொன்னவற்றை தாண்டி ஆரம்ப நிலையில் உள்ள அன்பர்கள் பொதுவாக தம்மை அன்னைக்கு உகந்தவராக மாற்றிக் கொள்ள விசேஷ முயற்சி எதுவும் எடுப்பதில்லை. அதாவது தன்னுடைய **personality** இல் உள்ள சோம்பேறித்தனம், பொய் சொல்வது, பொறாமைப்படுவது,பொறுப்பில்லாமல் நடந்து கொள்வது, அவசரம், பேராசை, பயம் போன்ற குணவிசேஷ குறைபாடுகளிருந்து விடுபடவோ அல்லது தன்னை திருத்திக் கொள்வதற் கோ **serious** - ஆக எந்த முயற்சியும் எடுப்பதில்லை. மேலும் இந்த நிலையில் உள்ள அன்பர்கள் அருள் நிபந்தனையின்றி செயல்படும் என்று நம்புகிறார்கள். ஆகவே அவர்க ள் எப்படி இருக்கிறார்களோ அப்படியே அன்னை அவர்களை ஏற்றுக் கொண்டு அருள் பாலிக்க வேண்டும் என்று எதிர்பார்க்கிறார்கள். அருள் நிபந்தனையின்றி செயல்படக் கூடியது என்ற அவர் களுடைய எதிர்பார்ப்பில் ஒரு உண்மையும் இருக்கிறது. அதாவது இப்படி நிபந்தனையின்றி அருள் செயல்படும்போது பிரார்த்தனை செய்யும் அன்பர்களுக்கு அருள் வழங்கும் குறைந்தபட்ச பலனாக நோய் குணமாவது, நல்ல வேலை மற்றும்

நல்ல கல்லூரி **admission** கிடைப்பது, தள்ளிப் போகும் திருமண சம்பந்தம் கூடி வருவது போன்ற பலன்கள் கிடைக்கும். அருளை
பொறுத்தவரை இது குறைந்தபட்ச பலன் என்றாலும் சம்பந்தப்பட்ட அன்பர்களுக்கு இவையெல்லாம் மிகப்பெரிய பலன் களாக தெரிவதால் அவர்கள் இதிலேயே முழு திருப்தி அடைந்து விடுகிறார்கள். அதோடு விட்டு விடுகிறார்கள்.

*2.* அன்பருக்கு உண்டான இரண்டாவது அணுகுமுறை அன்னையிடம் தன்னுடைய பிரச்சினைகளை **surrender** மற்றும் சமர்ப்பணம் செய்வது. பெரும்பாலான ஆரம்ப நிலை அன்பர்கள் இந்த அணுகுமுறையை மேற்கொள்வதில்லை. ஒரு சில சாதகர் நிலையில் உள்ள அன்பர்கள் மட்டுமே இந்த அணுகுமுறையை மேற்கொள்கிறார்கள். இந்த அணுகுமுறை மிகவும் சக்தி வாய்ந்தது என்பதால் சாதாரண பிரார்த்தனையை விட இந்த முறையில் அன்பர்களுககு கிடைக்கக் கூடிய பலன்கள் பல மடங்கு பெரிதாக இருக்கும். ஆனால், பலன் பெரிது என்றாலும் அதற்கு ஈடாக அணுகுமுறையும் அந்த அள விற்கு கடினமானது தான். ஆகவே ஏதோ ஒரு சில அன்பர்கள்தான் இந்த அணுகுமுறைக்கு முன் வருகிறார்கள்.

ஒரு அன்பர் பிரார்த்தனையை அன்னை முன் வைக்கும்பொழுது ஒரு குறிப்பிட்ட பிரச்சினைக்கு ஒரு குறிப்பிட்ட தீர்வை கேட்கிறார். வியாதி உள்ளவர்கள் வியாதியிலிருந்து நிவாரணமும், வேலை இல்லாதவர்கள் நல்ல வேலையும், திரு மணத்திற்காக காத்திருப்பவர்கள் நல்ல திருமண சம்பந்தத்தையும், வீடு இல்லாதவர்கள் சொந்தமாக ஒரு வீட்டையும் அன்னையிடம் கேட்பார்கள். அதாவது தனக்கு என்ன மாதிரி **result** வேண்டும் என்பதை அன்பர் ஏற்கனவே முடிவு செய்து கொள்வார். அந்த முடிவை அன்னைக்கு தெரிவித்து அவருடைய அருளை பயன்படுத்தி தான் விரும்பும் பலனை தனக்கு வழங்கச் சொல்வார். ஆனால் சமர்ப்பணம் என்ற அணுகுமுறையை அன்பர் மேற்கொள்ளும் பொழுது அன்பர் தனக்கு இது தான் வேண்டும் என்று அன்னையிடம் வலியுறுத்துவது இல்லை. மாறாக, பிரார்த்தனைக்கு அன்னை என்ன முடிவு வழங்க விரும்புகிறாரோ அதை தான் ஏற்றுக்கொள்வதாகச் சொல்லி முடிவை அன்னையின் இஷ்டத்திற்கு விட்டு விடுகிறார். அதாவது, சமர்ப்பணம் என்ற அணுகுமுறையை மேற்கொள்ளும் அன்பர் தனக்கு எது நல்லது என்பது தன்னை விட அன்னைக்குத் தான் தெரியும் என்று நம்புவதால் தன் இஷ்டத்தை விலக்கிக் கொண்டு பிரச்சினையை முழுவதும் அன்னை யின் கைகளில் ஒப்படைத்து விடுகிறார். 'என் இஷ்டத்திற்கு பதிலாக தங்கள் திரு உள்ளம் நிறைவேறட்டும்' என்று அர்த்தம் வருகின்ற **'Let Thy Will be done, Not my will'** என்ற ஒரு ஆங்கில மந்திரத்தை அன்னை தன்னுடைய யோக சாதனையில் இறைவனோடு தனக்கு உள்ள தொடர்பில், தனக்கு அவரோடு இருக்கும் **alignment**-ஐ காப்பாற்றிக் கொள்ள அடிக்கடி சொல்வதுண்டு. இந்த சமர்ப்பண முறையை மேற்கொள்கின்ற அன்னை அன்பர்கள் இதே அணுகு முறையை அன்னையிடத்தில் தாங்கள் பின்பற்றுவது உண்டு.

நாம் விரும்புகின்ற ஒரு குறிப்பிட்ட பலனை அன்னையிடம் கேட்பது சுலபம். அதாவது, இந்த வேலை வேண்டும், இந்த வருமானம் வேண்டும், மற்றும் இப்படிப்பட்ட திருமண சம்பந்தம் வேண்டும் என்று வரையறுத்து அன்னையிடம் கேட்பது சுலபம். ஆனால் பிரச்சினையை அன்னையிடம் சமர்ப்பணம் செய்து விட்டு அவர் வழங்கும் முடிவை ஏற்றுக் கொள்வதாக தீர்மானம் செய்து அது கிடைக்கும் வரையிலும் அமைதியாக பதட்டமோ டென்ஷனோ இல்லாமல் நம்பிக்கையோடு காத்திருப்பது மிகவும் கடினம். நம்பிக்கை மிக ஆழ்ந்த நிலையிலும் அதே சமயத்தில் முழுமையான சரணாகதியும் கொண்ட வர்களால் தான் இப்படி இருக்கவேமுடியும். ஆரம்ப நிலை அன்பர்களுக்கு இப்படிப்பட்ட நம்பிக்கையோ சரணாகதியோ இருப்பதில்லை. அன்னையின் இஷ்டத்திற்கு விட்டால் எங்கே அன்னை இவர்களுடைய விருப்பத்தை புரிந்து கொள்ளாமல் இவர்களுடைய ஆன்மாவுக்கு எது நல்லதோ அதை அன்னை கொடுத்து விடுவார் என்று அவர்கள் பயப்படுவார்கள். ஆரம்ப நிலை அன்பர்கள் பொதுவாக அகந்தை மையமானதும், ஆசை மயமானதுமான வாழ்கையை வாழ்ந்து கொண்டிருப்பதால் இவருடைய அகந்தையையும் ஆசையையும் ஒதுக்கி வைத்து விட்டு இவர்களுடைய ஆன்மாவுக்கு எது நல்லதோ அதை செய்யும் சுதந்திரத்தை அன்னைக்குத் தர விரும்புவதில்லை.

உதாரணமாக கல்லூரியில் ஒரு **degree**-யை எடுத்துக்கொண்டு படிப்பை முடித்துக் கொண்டு வெளியில் வருபவர்களுக்கு என்ன வேலை வேண்டும் என்ன வருமானம் வேண்டும் என்பது பற்றி மனதில் சில **idea**- க்களை வைத்திருப்பார்கள். **B.Com.,** அல்லது **M.Com.,** படித்திருக்கின்ற பட்டதாரியாக இருந்தால் இந்தப் பட்டப்படிப்பை வைத்துக் கொண்டு ஒரு பேங்க் வேலை தேடிக் கொள்ளலாம் மற்றும் அதன் மூலம் முப்பது ஆயிரம் அல்லது நாற்பதாயிரம் வருமானத்தையும் பார்க்கலாம் என்று எதிர்பார்ப்பார்கள். ஆகவே இப்படிப்பட்ட எதிர்பார்ப்பு உள்ள அன்பர் அன்னையிடம் **bank exam** இல் தான் பாஸ் ஆக வேண்டும் **interview** – இல் தான் தேற வேண்டும் மற்றும் தான் விரும்புகின்ற **bank clerk** அல்லது **officer** உத்தியோகம் கிடைக்க வேண்டும் மற்றும் தான் விரும்பிய முப்பது ஆயிரம் அல்லது நாற்பதாயிரம் வருமானத்தை பார்க்க வேண்டும் என்று தான் அன்னையிடம் அவருக்கு பிரார்த்தனை செய்யத் தோன்றும். இப்பொழுது இதே

நபர் ஆரம்ப நிலை அன்பராக இல்லாமல் ஒரு சாதகர்க்குரிய பக்குவமான சமர்ப்பணம் செய்யும் மனநிலை கொண்டவராக இருந்தால், இப்படி கல்லூரி படிப்பை முடித்து விட்டு வந்தவுடன் குறிப்பாக பாங்க் வேலை தான் வேண்டும் என்று அன்னை முன் பிரார்த்தனை வைக்க மாட்டார். அவர் என்ன செய்வார் என்றால் அன்னையிடம் தான் படித்து முடித்து விட்டதாகவும் தனக்கு ஒரு நல்ல வேலையும் வருமானமும் தேவைப்படுகிறது என்று மட்டும் அன்னையிடம் தெரிவிப்பார். மேலும் தனக்கு எந்த வேலை பொருத்தமானது என்ன வருமானத்திற்கு தனக்கு தகுதி இருக்கிறது என்று அன்னை நினைக்கிறாரோ அந்த வேலை மற்றும் வருமானத்தையும் அன்னை கொடுத்தால் தான் ஏற்றுக் கொள்வதாகவும் சொல்வார். அதாவது தன் இஷ்டத்தை வலியுறுத்தாமல் அன்னை என்ன வேலையையும் வருமானத்தையும் கொடுக்கின்றாரோ அது தனக்கு நல்லது என்ற எடுத்துக் கொள்வார். இப்படி அன்னையின் இஷ்டத்திற்கு அவர் முடிவை விடும்பொழுது அன்னை அவருக்கு அவர் விரும்பிய பாங்க் வேலையும் கொடுக்கலாம் அல்லது government வேலையோ அல்லது தனியார் company-இல் ஒரு வேலையோ கூட கொடுக்கலாம் அல்லது இதை எதையுமே செய்யாமல் இந்த அன்பர் சம்பளத்திற்கு வேலை செய்ய வேண்டியதில்லை என்றும் அதற்கு பதிலாக சொந்தமாக ஒரு தொழில் செய்து முப்பது, நாற்பது ஆயிரம் என்ற வருமானத்திற்கு பதிலாக மாதத்திற்கு பல லட்ச ரூபாய் வருமானத்தை பார்க்கக்கூடிய தொழில் அதிபராக தலை எடுப்பதற்கும் அன்னை வாய்ப்பு தரலாம்.

ஒரு அன்பர் தனக்கு ஒரு குறிப்பிட்ட வேலை வேண்டும் என்று சொல்வதால் அவருடைய வாழ்நாளில் அது தான் அவருடைய உச்சகட்ட career accomplishment- ஆக இருக்கும் என்று அன்னை எடுத்துக் கொள்ள வேண்டிய அவசியம் இல்லை. மாறாக அன்பருக்கே தெரியாமல் அவருக்குள் ஒரு சுய தொழில் செய்யும் ஆற்றல் மறைந்திருக்கிறது என்று அன்னைக்குத் தெரியலாம். ஏன் பாங்க் வேலை தேர்ந்தெடுக்கிறார் என்று அந்த அன்பரிடம் கேட்டால் தன் தகப்பனார் வங்கி ஊழியராக இருப்பதால் தானும் அதே line-இல் automatic -ஆக செயல்படமுடிவு செய்ததாகச் சொல்லலாம். ஏன் சுய தொழிலுக்கு முயற்சி செய்யாமல் சம்பளத்திற்கு வேலை செய்யப் போகிறீர்கள் என்று கேட்டால் தன்னுடைய உறவினர் வட்டாரத்தில் எல்லோருமே employment - இல் தான் இருப்பதாகவும் யாருமே சொந்தமாக தொழில் செய்து கொண்டு இல்லை என்றும் அதனால் தானும் மற்ற எல்லா உறவினர்களையும் போல employmentடே தனக்கு நல்லதென்று முடிவு செய்து விட்டதாக சொல்வார். இப்படி தனக்கே தெரியாமல் சுய தொழில் செய்யக் கூடிய ஒரு ஆற்றல் ஒரு அன்பரிடம் மறைந்திருக்கும்பொழுது இப்படிப்பட்ட அன்பர் சமர்ப்பணம் என்ற அணுகுமுறையை மேற்கொண்டாலேயொழிய அன்னையால் எப்படி இவருக்குள் ஒளிந்திருக்கும் அந்த ஆற்றலை வெளிக் கொண்டு வர முடியும்? ஆகவே இவையெல்லாம் வைத்துப் பார்க்கும்பொழுது நமக்கு எது வேண்டும் மற்றும் எது நல்லது என்று அன்னையிடம்வலியுறுத்துவதை விட நமக்கு எது நல்லது என்று அன்னைக்குத் தெரிகின்றதோ அதன்படி அவர் நமக்குச் செய்யட்டும் என்று அன்னையின் திருவுள்ளத்தோடு நாம் ஒத்துழைத்து அதற்கு நாம் வழி விட்டோம் என்றால் இன்று நமக்குக் கிடைக்கும் அருளை விட பல மடங்கு அதிகமாகவே நமக்கு அருள் கிடைக்கும். துரதிர்ஷ்டவசமாக இந்த உண்மை நம்மில் பலபேருக்கு தெரிவதில்லை. அப்படியே தெரிந்தாலும் ஏற்றுக்கொள்ளும் பக்குவமும் இல்லை. அதனால் மற்ற மனிதர்களோடு உறவாடும்பொழுது நம்முடைய இஷ்டத்தை நாம் வலியுறுத்துவது போல அன்னையோடு உறவாடும்பொழுதும் நம் இஷ்டத்தையே வலியுறுத்தி நம் சிற்றறிவுக்கு ஏற்றவாறு நம்முடைய சாதனையை சுருக்கிக் கொள்கிறோம்.

3. இப்படி சரணாகதி மற்றும் சமர்ப்பணம் என்ற அணுகுமுறை நமக்கு எப்படிப்பட்ட நல்ல பலனை கொடுக்கிறதோ அதே மாதிரியே ஒரு நல்ல பலனை கொடுக்கக்கூடிய ஒரு மூன்றாவது அணுகுமுறையும் உண்டு. ஆங்கிலத்தில் இந்த அணுகு முறையை Reversal of Attitudes என்று அப்பா அவர்கள் சொல்வார்கள். தமிழில் சொன்னால் அருளின் செயல்பாட்டிற்கு ஏற்றாற்போல் தன்னைத் திருத்திக் கொள்ளுதல் மற்றும் மாற்றிக் கொள்ளுதல் என்று வரும்.

பிரச்சினைகளை தீர்த்துக் கொள்வதற்கு இந்த Reversal of Attitudes என்ற அணுகுமுறை மிகவும் ஏற்ற ஒரு சக்திவாய்ந்த அணுகுமுறையாகும். ஏனென்றால் நமக்கு வருகின்ற பெரும்பாலான பிரச்சினைகள் ஏன் வருகின்றன என்று அலசி ஆராய்ந்து பார்த்தால் நம்முடைய தவறான மனோபாவங்கள் மற்றும் அவற்றின் வெளிப்பாடாக அமைகின்ற நம்முடைய செயல்பாடுகளால் தான் பிரச்சினைகளே வருகின்றது என்று நமக்குத் தெரியவரும். உதாரணமாக தன்னுடைய சக்திக்கு மீறி கடன் வாங்கி செலவு செய்து விட்டு தாங்க முடியாத கடன் சுமையால் அவதிப்படுகின்ற ஒரு அன்பரை எடுத்துக் கொள்வோம். அவருக்கு ஏன் இந்த பிரச்சினை வந்திருக்கின்றது என்று ஆராய்ந்து பார்த்தால் financial discipline இல்லாமல் வரவுக்கு மேல் செலவு செய்கின்ற தவறான மனோபாவமும் பழக்கமும் இருப்பதால் தான் அவருக்கு இந்த பிரச்சினை வந்திருக்கின்றது என்று தெரிய வரும். ஒன்று வருகின்ற வருமானத்திற்குள் செலவை சுருக்கிக் கொள்ள தெரிய வேண்டும் அல்லது செய்ய விரும்புகின்ற செலவுக்கு ஏற்ற அளவிற்கு வருமானத்தை பெருக்கிக் கொள்ளும் சாமர்த்தியமாவது வேண்டும். இப்படி கட்டுப்பாடும் இல்லாமல் சாமர்த்தியமும் இல்லாமல் இருக்கின்றவர் இரண்டையும் செய்யாமல்

மூன்றாவது வழியில் தெரிந்தவர்களிடம் இஷ்டத்திற்கு கடன் வாங்கி செலவு செய்து விட்டு கடனாளியாக மாறுகிறார். கடன் கொடுத்தவர்கள் நெருக்கும்பொழுது கடனை அடைக்க வழி தெரியாமல் அன்னை மூலம் நிவாரணம் கிடைக்கும் என்று அன்னையிடம் ஓடி வருகிறார். இந்த கட்டத்திலாவது தன்னுடைய கடன் பிரச்சினைக்கு மூல காரணம் தன்னுடைய சக்திக்கு மீறி செலவு செய்தாவது செலவை சமாளிக்க வேண்டும் என்ற தவறான மனோபாவம் தான் என்று உணர வேண்டும். அதை உணரும் பட்சத்தில் அவருடைய கடன் பிரச்சினையை தீர்க்க அன்னை எடுக்கின்ற முயற்சிக்கு ஒத்துழைப்பு தரும் வகையில் இந்த தவறான மனோபாவத்தையும் பழக்கத்தையும் விட்டு விடுவதாகவும் மேலும் அன்னையின் அருளால் கடன் பாரம் முழுவதும் தீர்ந்து இவருடைய தேவைக்கேற்ற வருமானத்தைபார்க்கும் வரையிலும் யாரிடமும் ஐம்பது அல்லது நூறு ரூபாய் கூட இவர் கடன் வாங்குவது இல்லை என்று தீர்மானம் எடுக்க வேண்டும். இப்படி தன்னுடைய குறைப்பாட்டை உணர்ந்து அந்த இடத்தில் தன்னை திருத்திக் கொள்ள முன்வருவதைத் தான் அப்பா அவர்கள் **Reversal of Attitudes** *என்கிறார்*. ஆகவே இப்படிப்பட்ட கடன் பிரச்சினையில் மாட்டிக் கொண்ட அன்பர் அன்னையிடம் தான் கொடுத்த வாக்குறுதியில் உறுதியாக நின்றார் என்றால் இந்த ஒத்துழைப்பை வைத்து கொண்டு அருளால் அவரை இந்த கடன் பிரச்சினையில் இருந்து விரைவில் மீட்க முடியும்.

இதே ரீதியில் நிறைய அன்பர்கள் வாழ்க்கையில் முன்னேற முயற்சி செய்யும்பொழுது அதற்கேற்ற புதிய வாய்ப்புக் களை உருவாக்கி தரும்படி அன்னையிடம் கேட்டுக் கொள்கிறார்கள். அவர்க ளுடைய வேண்டுகோளை ஏற்று அன்னையும் அப்படி அவர்கள் வாழ்க்கையில் இதுவரை பார்த்திராத புதிய வாய்ப்புகளை உருவாக்கி கொடுக்கிறார்கள். அது வெளிநாடு சென்று வேலை செய்யக்கூடிய வாய்ப்பாக இருக்கலாம் அல்லது தமிழ் நாட்டில் உள்ள ஒரு அன்பருக்கு டெல்லி மற்றும் மும்பைக்கு சென்று வேலை செய்யக்கூடிய வாய்ப்பாக இருக்கலாம் அல்லது சம்பளத்திற்கு வேலை செய்பவருக்கு சுய தொழில் செய்யக்கூடிய ஒரு வாய்ப்பாகவும் வரலாம். இவை போக திருமண சம்பந்தம் தேடி கொண்டிருப்பவருக்கு அவரு டைய தகுதிக்கு மீறிய திருமண சம்பந்தமாகவும் அமையலாம். இம்மாதிரி வாய்ப்புகள் அன்பர்களின் வாழ்க்கையில் பலிக்க வேண்டுமென்றால் வருகின்ற வாய்ப்புக்கேற்றபடி அன்பர் தன்னை மாற்றிக் கொள்ள வேண்டும்.

நல்ல வருமானத்தை கொடுக்கக் கூடிய ஒரு உயர்ந்த வேலை மும்பை, டெல்லி போன்ற இடத்தில் கிடைத்தால் கூட தமிழ் நாட்டில் வசிக்கின்ற சில அன்பர்களால் இத்தகைய வாய்ப்புகளை ஏற்றுக் கொள்ள முடிவதில்லை. வயதான பெற் றோரை பார்த்துக் கொள்ள வேண்டியிருக்கிறது. அதனால் அவர்களை விட்டு வர இயலாது என்று சொல்வார்கள் அல்லது தனக்கு ஹிந்தி தெரியாது அதனால் டெல்லியில் போய் வசிப்பது கஷ்டம் என்று சொல்வார்கள். இது போக ஒரு சிலர் சாம் பார் சாதம், ரசம் சாதம், மற்றும் தயிர் சாதம் தான் சாப்பிட்டு பழக்கம், இப்பொழுது திடீரென்று இதற்கு பதிலாக ரொட்டி, சப் பாத்தி, **dal** சாப்பிடச் சொன்னால் முடியாது என்று இப்படிச் சொல்லி சாப்பாட்டு பழக்க வழக்கங்களை மாற்ற முடியாது என்று காரணம் காட்டுவார்கள். சுய தொழில் செய்ய விரும்புகின்றவர்கள் சம்பளத்திற்கு வேலை செய்வதை விட மேலும் கடி னமாக உழைக்க முன் வர வேண்டும். மேலும் **financial risk** எடுத்து முதலீடு செய்ய முன் வரவேண்டும். கடன் வாங்க வேண்டி இருந்தால் அதையும் தைரியமாக வாங்க வேண்டும். இப்படி மேலும் கடினமாக உழைக்க முன்வராவிட்டாலும், கடன் வாங்கினால் வெற்றிகரமாக திருப்பித் தர முடியும் என்ற நம்பிக்கை இல்லாமல் போனாலும், அன்னை அவர்களுக்கு வழங்குகின்ற சுய தொழில் வாய்ப்பால் எந்த பிரயோஜனமும் இல்லை. இம்மாதிரியே அன்னை வெளியூரில் நல்ல வேலை வாங்கிக் கொடுத்தால் அதைப் பயன்படுத்திக் கொள்ள விரும்புகின்றவர்களுக்கு வயதான பெற்றோர்களை கவனித்துக் கொள்ள வேறு ஏற்பாடுகள் செய்து கொள்ளத் தெரிய வேண்டும். ஹிந்தி தெரியாவிட்டால் **english**- யை வைத்து சமாளித்துக் கொள்ள முடியும் என்று முடிவு செய்ய வேண்டும் அல்லது ஹிந்தி கற்றுக் கொள்ளும் முயற்சிகளை எடுக்க வேண்டும். உணவு பழக்க வழக்கங்களை மாற்றிக் கொள்ள முடியாது என்று பிடிவாதம் செய்யாமல் தேவைப்பட்டால் ரொட்டி,
சப்பாத்தி, **dal** சாப்பிடுகிறேன் என்று முன் வர வேண்டும். தங்கள் தகுதிக்கு மீறி பெரிய இடத்தில் திருமண சம்பந்தம் வந்தால் அதைக் கண்டு மிரண்டு போகாமல் அவர்களோடு நல்லபடியாக பழகும் அளவிற்கு தங்களுடைய **manners** ஐ பக்குவப்படுத்திக் கொள்ள வேண்டும்.

இப்படியெல்லாம் வருகின்ற பெரிய வாய்ப்புக்களுக்கு ஏற்றபடி தன்னை மாற்றிக் கொள்ள முன் வருபவர்களுக்குத் தான் அன்னையின் அருள் முழுமையாக பலிக்கும். மாறாக எவ்வளவு பெரிய வாய்ப்பு வந்தாலும் தான் இருக்கின்றபடிதான் இருப்பேன், வளைந்து கொடுக்க மாட்டேன் என்று சொல்பவர்கள் அன்னை பக்தர்களாக இருந்தாலும் அவர்களுக்கு கிடைக் கின்ற அருளுக்கு உரிய பலனை பெறுவது என்பது மிகவும் கடினமாகி விடும்.

*4.* நான்காவது அணுகுமுறையைப் பற்றி இப்பொழுது பார்ப்போம். **Value** -க்களை ஏற்றுக் கொண்டு அவற்றை நடைமுறையில் கடைப்பிடிப்பவர்கள் அன்னை அன்பர்களாக இருக்கும் பட்சத்தில் அவர்கள் சிறப்பாக சாதிக்கலாம். அப்பா அவர்கள் **value**-க்களை **Spiritual Skills** அதாவது ஆன்மீக திறமைகள் என்று கூறிப்பிட்டுள்ளார். அன்னையின் அருளும், **value** -க்களும் ஒன்றாக இணையும் பொழுது அருளால் கிடைக்கின்ற பலன்கள் பல மடங்கு பெரிதாகின்றன.

**Value** -க்கள் பல நிலைகளில் இருக்கின்றன. சுத்தம், ஒழுங்கு, காலம் தவறாமை, செயல் நேர்த்தி, சரியாக கணக்கு எழுதுதல், தணிவான பேச்சு போன்ற இவையெல்லாம் **physical level** -லில் உள்ள **value** -க்கள். **Psychological value**-க்கள் என்று பல இருக்கின்றன. நல்லெண்ணம், சுமுகம், பணிவு, போன்ற **value** -க்களை இதற்கு உதாரணமாக காட்டலாம். அறிவு சம்பந்தப்பட்ட **mental value** -க்களும் உள்ளன. **Power of organization** மற்றும் அடுத்தவர் கண்ணோட்டத்தை ஏற்றுக் கொள்ளுதல் போன்றவற்றை **mental value** -க்கு உதார ணமாக காட்டலாம். இவை போக ஒழுக்க நெறி சம்பந்தப்பட்ட **value** -க்கள் இருக்கின்றன. அதாவது, நேர்மை, உண்மை, நியாய மனப்பான்மை போன்றவை இவற்றின் கீழ் வரும். இவை எல்லாவற்றையும் விட ஆன்மீக **value** -க்கள் தான் மிக வும் சிறந்தவை ஆகும். இறை நம்பிக்கை, சரணாகதி, சமர்ப்பணம், இறை ஆர்வம் மௌன சக்தி, சமநிலை போன்றவைகள் ஆன்மீக **value** -க்கள் ஆகும். இப்படிப்பட்ட **value** -க்களை கடைபிடிக்கும்பொழுது அன்பர்களுடைய சாதனைக்கு வரம்போ முடிவோ இல்லை என்ற அளவிற்கு சாதனையின் தரம் உயரத் தொடங்கி விடும்.

மேற்சொன்ன ஆன்மீக **value** -க்களுடைய சக்தி பெரிது என்றாலும் இந்த **value** -க்களை வளர்த்துக் கொள்வதோ மற்றும் நடைமுறையில் கடைப்பிடிப்பதோ மிகவும் சிரமமான காரியமாகும். ஏனென்றால் இவ்**value** க்களை ஏற்றுக் கொள்பவர்கள் தம்முடைய மனோபாவங்களையும் செயல்படும் பாணியையும் பெருமளவு மாற்றியாக வேண்டும். அந்த அளவு மாற முன்வருபவர்கள் குறைவு. பொதுவாகவே நமக்கு நம்முடைய திறமை, நம்முடைய பணபலம் பதவி பலம் நம்முடைய சமூக அந்தஸ்து நம்முடைய **social contacts** என்று இவற்றின் மேல் தான் நம்பிக்கை இருக்கிறது. நமக்கு பிரச்சனை என்று எழுந்தாலோ அல்லது தேவை என்று ஒன்று எழுந்தாலோ இவற்றைக் கொண்டு சமாளித்து கொள்ள லாம் என்று முயற்சி செய்கிறோம். உடம்புக்கு வந்தால் பார்த்துக் கொள்ள டாக்டர் இருக்கிறார், தகராறு வந்தால் கோர்ட்டில் தீர்த்துக் கொள்ள வக்கீல் இருக்கிறார். கடன் தேவைப்பட்டால் கொடுப்பதற்கு வங்கிகளும் பான் புரோக்கர் கடைகளும் இருக்கின்றன என்று தான் நமக்கு நினைக்கத் தோன்றுகிறது. அதாவது நம்மடைய அறிவு தன்னுடைய சொந்த சாமர்த்தியத்தையும் மற்றும் பணபலம், பதவி பலம் மற்றும் சமூக அந்தஸ்து என்று இவற்றைத்தான் நம்புகிறது. இப்பொழுது அன்னைமேல் முழு நம்பிக்கை வளர்த்து கொள்ளப் பிரியப்படுபவர் இப்படி பணம், பதவி, சொந்த சாமர்த்தியம் என்று இவற்றின் மேல் வைத்துள்ள நம்பிக்கையை விட முன் வரவேண்டும். ஆனால் இவற்றின் மேல் உள்ள நம்பிக்கையை விடு வது என்பது அவ்வளவு சுலபமும் இல்லை. தன்னுடைய மாத வருமானத்தை இலட்ச ரூபாய் அளவிற்கு உயர்த்திக் கொள்ள தேவையான வாய்ப்புகளோ, சாமர்த்தியமோ ஒருவருக்கு இல்லை என்று அவருடைய அறிவு அவரிடம் சொன்னால் அவர் அதைத்தான் நம்புகிறாரே ஒழிய அவருடைய வாழ்க்கை சூழ்நிலையை மீறி அவருடைய சாமர்த்திய குறைபாட்டை யும் மீறி அன்னையின் அருளால் அவருடைய மாத வருமானத்தை இலட்ச ரூபாய் அளவிற்கு உயர்த்த முடியும் என்று ஒரு சாதாரண அன்பரால் அவ்வளவு சுலபமாக நம்ப முடிவதில்லை. தனக்கு வந்துள்ள வியாதியை குணப்படுத்த முடியாது என்று டாக்டர் சொல்லி விட்டாலோ அல்லது போதிய ஆதாரம் இல்லாததால் உங்களுடைய கேஸ் கோர்ட்டில் ஜெயிக்காது என்று வக்கீல் சொல்லிவிட்டாலோ இவர்களுடைய கருத்துகளை முடிவாக ஏற்றுக் கொண்டு மனிதன் நம்பிக்கை இழந்து விடுகிறான்.

இப்படி நாம் செயல்படுவது என்பது நாம் நம்முடைய **physical mind**- ஐ நம்பிச் செயல்படுகிறோம் என்பதை காட்டுகிறது. இப்படிச் செயல்படுகிறவர்களால் அன்னை வழியில் பெரிதாக சாதிக்க முடியாது. ஆனால் நம்முடைய **physical mind** -க்கு நேர் எதிரான அணுகுமுறையை அன்னை மேல் நாம் வைக்கின்ற நம்பிக்கை மேற்கொள்கிறது. அறிவை விட நம்முடைய ஆன்மாவின் ஆற்றல் பெரியது என்பதால் நம்முடைய அறிவாலும், நம்முடைய திறமையாலும் சாதிக்க முடியாததை நம்முடைய ஆன்மா சாதிக்கும் என்று நம் நம்பிக்கை சொல்கிறது. ஆகவே நம்பிக்கையால் செயல்படு கின்றவர் ஆன்மாவின் ஆற்றலையும், அருளின் ஆற்றலையும் தான் முடிவாக எடுத்துக் கொள்கிறார். அப்பட்சத்தில் பணபலம், பதவிபலம், சமூக அந்தஸ்து, **social contacts**, அறிவு பலம் மற்றும் மருந்து, மாத்திரை,டாக்டர், வக்கீல், சட்டம் என்று எல்லாமே இரண்டாம்பட்சமாகி அருள் நமக்கு வழங்க விரும்பும் பலன்களை கொண்டு வரக்கூடிய கருவிகளாக மாறுமே ஒழிய இவையே பிரதானமாக இருப்பதில்லை. ஆகவே இதை புரிந்து கொண்டு தம்முடைய **physical mind** ஆதிக்கத்திற்கு கட்டுப்பட்டிருக்கும் அன்பர்கள் அதிலிருந்து விடுபட்டு அன்னையின் அருளின் ஆற்றலின் மேல் அபார

நம்பிக்கை வளர்த்துக் கொண்டார் என்றால் இந்நாள் வரை அவரால் சாதிக்க முடியாத காரியங்களை சாதிப்பார்கள். இந்நாள் வரை தீராமல் அவர்களை வருத்திக் கொண்டிருக்கும் பிரச்சினைகளும் உடனே தீர்வதையும் அவர்கள் பார்க்க லாம்.

நம்பிக்கையைப் பற்றி நாம் பேசும்பொழுது அதோடு நெருங்கிய தொடர்புடைய மற்றொரு ஆன்மீக value- ஆன சமர்ப்பணம் மற்றும் சரணாகதியை நாம் கருதியே ஆக வேண்டும். எவர் ஒருவரால் நம்பிக்கையை வளர்த்துக் கொள்ள முடி யுமோ அவரால் சமர்ப்பணத்தையும் சிறப்பாக செய்ய முடியும் என்று நாம் சொல்லலாம். அன்றாட வாழ்க்கையிலும் கூட நாம் அடுத்தவரை பூரணமாக நம்பி அவருக்கு surrender ஆகி நம் விஷயங்களை அவரிடம் ஒப்படைத்து நம் காரியங்களை நம்மை விட அவர் சிறப்பாக நிறைவேற்றுவார் என்று நம்பி செயல்படுகின்ற இடங்கள் நிறைய இருக்கின்றன. ஒரு குறிப்பிட்ட டாக்டர் தன்னை குணப்படுத்துவார் என்று ஒரு நோயாளிக்கு நம்பிக்கை வரும்போது அவர் அந்த டாக்டருக்கு surrender ஆகி விடுகிறார். Treatment விஷயத்தில் டாக்டருக்கு முழுவதும் கட்டுப்பட்டு அவர் வழங்கும் treatment தமக்கு பிடிக்கிறதோ இல்லையோ அவர் சொன்னதை எல்லாம் செய்தால் தனக்கு நல்லது என்று நம்பி அப்படியே செய்கிறார். ஒரு இளம் பெண் குறிப்பிட்ட ஆண்மகனை கணவராக தேர்ந்தெடுத்தால் அவர் இவளை நன் றாக பார்த்துக் கொள்வார் என்று மனதில் பட்டால் அவரை பூரணமாக நம்பி தன் வாழ்க்கையை அவர் கையில் ஒப்படைத்து அவருடைய அதிகாரத்திற்கு தான் surrender ஆகி விடுவதை நாம் பார்க்கிறோம். அந்த நம்பிக்கை மற்றும் சரணாகதி யின் வெளிப்பாடாக கணவனாக மாறிய ஆண்மகன் என்ன செய்யச் சொன்னாலும் அதை தனக்கு நல்லது என்று நம்பி அப் பெண் செய்வதையும் பார்க்கிறோம். இப்படி மக்கள் டாக்டர்களையும் வழக்கறிஞர்களையும் மற்றும் திருமணம் செய்து கொள்ளும் ஆண்களையும் முழுவதுமாக நம்பி அவர்களுக்கு surrender ஆகி அவர்களிடம் தம் பிரச்சினைகளையும் தன் வாழ்க்கையையும் ஒப்படைக்கும்பொழுது அன்பர்கள் ஏன் அன்னையை முழுவதும் நம்பி அவருக்கு surrender ஆகி அவர் கையில் தம் வாழ்க்கையை ஒப்படைக்கக் கூடாது என்ற கேள்வி எழுகிறது. இப்படி அன் னையிடம் surrender ஆகிய அன்பர்கள் தம்முடைய பிரச்சினைகள் உடனே கதிரவனின் ஒளி பட்டவுடன் காலைப்பனி கரைவதைப் போல உடனே மறைவதைப் பார்க்கிறோம்.

அன்னை அன்பர்களுக்கு மிகவும் உதவக்கூடிய மூன்றாவது spiritual value silent will என்று அப்பா அவர் களால் வர்ணிக்கப்படுகின்ற மௌன சக்தி ஆகும். எதையுமே கேட்டுப்பெறுவது தான் நம்முடைய வழக்கம் என்று நாம் இருக் கிறோம். காலையில் நாம் குடிக்கும் டீ, காபியில் ஆரம்பித்து வேலை, வருமானம், promotion, increment, வாழ்க்கை துணையை தேடிக் கொள்ளுதல் என்று எல்லா இடத்திற்கும் இப்பழக்கம் வந்து விடுகிறது. இப்படிக் கேட்டு வாங்கிக் கொள்வதை நிறுத்தி கேட்காமல் இருந்தால் நமக்குத் தேவையானது நமக்கு விரைவாகவும் கிடைக்கும், அதிகமாகவும் கிடைக்கும் என்று நமக்குத் தோன்றுவதே இல்லை. நமக்கு ஒரு வேலையோ, வாழ்க்கைத் துணையோ மற்றும் ஏதேனும் உதவியோ தேவைப்பட்டால் நம் விருப்பத்தை நிறைவேற்றக்கூடிய இடத்தில் இருப்பவர்களை அணுகி நீங்கள் எனக்கு வேலை கொடுப்பீர்களா? உங்களோடு திருமண சம்பந்தம் கிடைக்குமா? மற்றும் இந்த உதவியை எனக்கு செய்வீர்களா என்று கேட்டுப் பார்க்கத்தான் நமக்கு இயற்கையாகத் தோன்றுகிறது. ஆனால் மௌன சக்தியை கடை பிடிப்பவர்கள் வேறு அணுகுமுறையை ஏற்றுக் கொள்கிறார்கள். அன்னையிடம் அவர்களுடைய வாழ்க்கையை ஒப்படைத்து விட்டதால் அவர்களுக்கு என்ன தேவை எழுந்தாலும் அதை அன்னையிடம் தெரிவித்து விட்டு அவர்கள் அமைதியாக இருக்க வேண்டும். அவர்கள் வாழ்க்கைக்கு அன்னை பொறுப்பேற்று கொண்டிருப்பதால் அன்பர் தன்னிடம் தெரிவித்துள்ள தேவையை அன்பரு டைய சூழலில் இருக்கின்ற யாரையேனும் வைத்துப் பூர்த்தி செய்கின்ற முயற்சியை அன்னை எடுக்கின்றார். அன்பருடைய தேவை வேலை வேண்டும் என்றோ, நிதி உதவி வேண்டும் என்றோ வாழ்க்கைத் துணை வேண்டும் என்றோ மற்றும் physical help வேண்டும் என்றோ எந்த ரூபத்தில் வேண்டுமென்றாலும் இருக்கலாம். ஆனால் மௌன சக்தி செயல்படும் போது சட்டம் ஒன்று தான்.

நமக்கு வேண்டியதை அன்னை யார் மூலமாவது நமக்கு delivery செய்து விடுவார். நாம் கேட்க வேண்டியது அன் னையை மட்டுமே ஒழிய மற்றவரை அல்ல. உதாரணமாக ஒரு அன்பருக்கு மகளின் திருமணத்திற்காக கடன் உதவி தேவைப்படுவதாக வைத்துக் கொள்வோம். இப்படி ஒரு உதவி தேவைப்படும் போது எந்த உறவினரையோ அல்லது நண்பரையோ கேட்டால் அவருக்கு கடன் உதவி கிடைக்கும் என்று தோன்றுகிறதோ அவர்களை அணுகி கேட்பதற்கு அவ ருக்கு இயற்கையாகத் தோன்றும். இவர் மௌன சக்தியை கடைப்பிடிப்பவராக இருந்தால் தனக்கு நிதி உதவி தேவைப்படுகிறது என்று அன்னையிடம் சொல்லி விட்டு உறவினர்களையோ அல்லது நண்பர்களையோ இவர் கேட்காமல் இருக்க வேண்டும். அவர் அப்படி இருந்தார் என்றால் அன்னை கடன் உதவி செய்யக்கூடிய உறவினர்களுக்கும் நண்பர் களுக்கும் ஒரு தூண்டுதலை மானசீகமாக வழங்கி அவர்களே இவரை போனில் தொடர்பு கொண்டோ அல்லது நேரில் வந்து

பார்த்தோ “ மகளுக்கு திருமண ஏற்பாடு செய்து இருக்கின்றீர்கள் என்று கேள்விப்பட்டேன், ஏதேனும் கடன் உதவி தேவை யா? தேவை என்றால் எவ்வளவு தேவை என்று சொல்லுங்கள் நான் கொடுக்கிறேன்” என்று அவர்களே இவரிடம் வந்து தெரிவிக்கும்படி செய்வார். வேலை விஷயமாகவோ அல்லது அட்மிஷன் விஷயமாகவோ **recommendation letter** தேவை என்றாலும், அவசரமாக ஒரு இடத்திற்கு போக தெரிந்தவருடைய கார் வேண்டும் என்றாலும் அன்னை இப்படியே செயல்படுவார். அதாவது பிரச்சினை எப்படிப்பட்டதாக இருந்தாலும் தேவைப்படும் உதவி எந்த ரூபத்தில் இருந்தாலும் மௌன சக்தியை ஒரு அன்பர் பயன்படுத்தினால் அது ஒரே மாதிரித் தான் செயல்படும். மௌன சக்தி எப்படி எல்லாம் செயல் பட்டுள்ளது என்பதை பல அன்பர்கள் தங்கள் வாழ்க்கையில் பல ரூபத்தில் பார்த்துள்ளார்கள். இதைப் பற்றி என் தகப்பனாருக்கு நிறைய கடிதங்கள் வந்துள்ளன, மேலும் தியான மையங்களில் நிறைய அன்பர்கள் தங்களுடைய அனுப வங்களை பேசியும்இருக்கிறார்கள்.

கடைசியாக நான் சமநிலை என்ற நான்காவது **spiritual value-** வை பற்றி விவரிக்க விரும்புகிறேன். சமநிலை என்பது நம் வாழ்க்கையில் நடக்கும் நிகழ்ச்சிகளால் நாம் நிதானம் இழக்காமல் இருப்பதைக் காட்டுகிறது. இது ஒரு தெய்வீகமான குண விசேஷமாகும். ஏனென்றால் பூவுலகத்தில் நடக்கின்ற எந்த நிகழ்ச்சியாலும் தெய்வம் தன் நிதானத்தை இழக்காமல் இருப்பதை நாம் பார்க்கிறோம். பக்தர்களுடைய வழிபாட்டால் அவர் பரவசம் அடைவது இல்லை. இம்மாதிரியே நாத்திகர்களுடைய மறுப்பாலோ மற்றும் அவர்களுடைய நிந்தனைகளாலோ அவர் வருத்தப்படுவதும் இல்லை. அன்னை தன்னுடைய பிறப்பிலேயே இந்த சமநிலையை பெற்றுள்ளார். இல்லாவிட்டால் அவரால் இந்த பூரண யோகத்தினுடைய கடுமைகளை சமாளித்திருக்கவே முடியாது. அவருடைய பக்தர்களாக நாம் இருக்கும் பட்சத்தில் அவருடைய அருளும் ஆசியும் நம் வாழ்க்கையில் தொடர்ந்து கிடைக்க வேண்டும் என்றால் அவர் வளர்த்துக் கொண்டுள்ள இந்த சமநிலையை நம் சக்திக்கு ஏற்றவாறு நம் வாழ்க்கையிலும் வெளிப்படுத்த வேண்டும். நமக்கு நல்ல செய்தி வந்தால் கட்டுக்கடங்காத பரவசமும் வரக்கூடாது. அதே சமயத்தில் நமக்கு வரும் கெட்ட செய்தியாலும் நாம் நிலை குலைந்து போய் வருத்தத்திலும் முழுகக்கூடாது. வருகின்ற நல்ல செய்தியை நாம் நிதானமாக ஏற்கும்பொழுது அந்த நல்ல செய்தியால் வருகின்ற நன்மை வளரும். இம்மாதிரியே கெட்ட செய்தியையும் நாம் நிதானமாகக் கேட்டுக்கொள்ளும்பொ ழுது இந்த செய்தி மூலம் வரும் கெட்டதற்கும் நம்மேல் ஒரு பிடிப்பு கிடைக்காமல் நம் சூழலை விட்டு விரைவில் விலகும்.

ஆகவே நான் இறுதியாக என்ன சொல்ல விரும்புகிறேன் என்றால் அன்னை அன்பருக்கு என்று என் தகப்பனார் ஸ்ரீ கர்மயோகி அவர்கள் வகுத்துக் கொடுத்த பாதையில் நாம் நெறியாக நடந்து செல்வது என்று முடிவு செய்து விட்டோம் என்றால் அதோடு சேர்த்து நம்பிக்கை, சரணாகதி, மௌன சக்தி மற்றும் சமநிலை ஆகிய ஆன்மீக **value** க்களையும் **serious** ஆக கடைபிடித்தோம் என்றால் நம்முடைய சாதனை நம்முடைய கற்பனைக்கெட்டாத உயரத்திற்கு சென்று விடும் என்று தெரிவித்துக் கொள்கிறேன்.

*********